முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கணநாதர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.11.2018, வெள்ளிக்கிழமை

1. **அருட்பெருஞ் சுடரான சக்தியே**
**அறம்மிகு ஆற்றலாக வந்த**
**அருட்சுடரே ஆறுமுக ஞானியே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே சப்தம திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 7ம் நாள் 23.11.2018, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு கணநாதர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞானியாக வந்தருளும்
ஞானதேசிகன் அருள் பெற
நம்பிக்கை ஞானிகள் மேல் வைக்க வேணும்
4. வேண்டியே தான தருமமுடன்
விடாது சித்தர் பூசைகளும்
தொண்டென செபதப முறை
தொடர் பூசையாக செய்து வருக
5. வருகவே அரங்கன் அருளுடன்
வரமும் கிட்டி சிறப்பு கூடும்
தருமமுடன் செய்யும் பூசையை
தண்டாயுதனும் ஏற்று நடத்த
6. நடத்தவே பிரணவக் குடிலில்
நம்பிக்கை வைத்த மக்களுக்கு
இடர்கள் என்பதே இல்லை
எக்காலமும் துன்பம் அணுகா
7. அணுகா அமைதி வாழ்வும்
ஆசான் ஆசிபட அனைத்துவகை
தானாக செயல்கள் வெற்றிபெறும்
தவபலமும் கிட்ட நேரும்
8. நேருமைபட அரங்கன் வழியில்
நிலவுலகில் சன்மார்க்கம் வளர
தருமமான ஆட்சி நடக்கும்
தவறுகள் எந்த துறைகளிலும்
9. துறைகளிலும் தொடரா நீக்கப்படும்
துறைகள் வளர்ச்சி நிலையென
நிறைவான சேவை வளரும்
நீதித்துறைகளும் உண்மைபட சேவை

10. சேவை நீதிகாக்கும் வண்ணம்
செயல்படும் சிறப்பு நிலையாக
அவணியில் அரங்கன் தருமம் வளர
ஆற்றல்பட அரசு பலம் பெறும்

11. பலமுற மக்கள் தேவைகள்
பழுதில்லா நிறைவேறக் கூடும்
வளமுற வணங்கி வருக
வையகமே நிலை உயரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கணநாதர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஜோதி சொரூபமே! அருட்பெருஞ்ஜோதி சுடரான மகா ஞானசக்தி வடிவமே! எல்லையில்லா தர்மத்தின் சக்திமிக்க ஆற்றலாக வந்துதித்திட்ட அருட்பெருஞ்சுடரே! ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே! அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 7ம் நாள் 23.11.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கணநாதர் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கணநாதர் நாயனார்.

இவ்வுலகினை காத்து ரட்சிக்கவே அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானி ஞானதேசிகனார் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அருளினைப் பெற வேண்டுமாயின், ஞானிகளின் மேல் நம்பிக்கை வைத்து, ஞானிகள் திருவடிகளை பூஜை செய்திட வேண்டும். தானதருமங்களை தவறாமல் தாராளமாய் செய்திட வேண்டும். சித்தர் திருவடிகளை இடைவிடாது பூஜைகள் செய்து வருவதுடன் ஜெபதபங்களை செய்தும் வர வேண்டும். இவ்விதமே செய்து வரவர, அவர்களுக்கு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளும் வரமும் கிடைத்திடும். தருமங்களை தளராமல் செய்து ஞானிகளை வழிபாடுகள் செய்து வருகின்றவர்களுக்கு முருகப்பெருமானின் அருளும் கிட்டிட முருகப்பெருமானும் அவர்களை ஏற்றுக் கொள்வார்.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை முழுநம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு குடிலை நாடி வருகின்ற மக்களுக்கு துன்பங்கள் என்பதே இல்லையப்பா. எக்காலத்தும் துன்பங்கள் அணுகாத வகையில் அமைதியான வாழ்வும் ஆசான் அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளுடன் அவர்கள் மேற்கொள்கின்ற அனைத்து செயல்களும் தானாகவே வெற்றிபெறும். அவர்கள் தவபலத்தினையும் பெற்று சிறப்படைவார்கள்.

உலக மக்கள் நேர்மையான வாழ்வை வாழ்ந்து உலகமெங்கும் சன்மார்க்கம் வளர்ந்திட உலகினில் நடக்கும் ஆட்சி தர்மத்தின் ஆட்சியாக அமைந்திடும். எந்த துறையில் தவறுகள் நடந்தாலும் அது மேலும் தொடராமல் நீக்கப்படும். அரசின் எல்லா துறைகளும் வளர்ச்சியடையும். நிறைவான வகையில் அரசின் தொண்டுகளும் சேவைகளும் அற்புதமாய் வளர்ச்சியடையும், நீதித்துறையும் உண்மையுடன் சேவையாற்றும்.

நீதித்துறையின் சேவைகளெல்லாம் நீதியை நிலைநாட்டும்விதமாக செயல்படும். சிறப்பான நிலையை நீதித்துறை அடையும்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமம் வளரவளர, அரசும் ஆற்றல்மிக்க அரசாக பலம்மிக்க அரசாக மாறிடும். மக்களின் தேவைகள் எல்லாம் குறைவின்றி நிறைவாக நிறைவேறும். முழுமையாக மக்களெல்லாம் ஞானிகளை வணங்கி வரவர, இவ்வுலகமே நிலை உயர்ந்திடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கணநாதர்.

–சுபம்–